# ஜெய் ப்ரத்யங்கிரா பீடத்தின் ஸ்தாபகர்
# ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்

உலகிற்கு எடுத்துரைக்கும்

## ஜெய் ப்ரத்யங்கிரா
## தினசரி ராகு கால பூஜை தீப வழிபாட்டு முறை.







ஆன்மிகத்தில் தன் 8 வயதில் ஞானமாக பெற்று ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள், ப்ரத்யங்கிரா உபாசனையை ப்ரம்ம ஞானமாக பெற்று, 30 ஆண்டு காலங்களாக ஜெய் ப்ரத்யங்கிரா உபாசனையில் திளைத்து இருக்கிறார். ஜோதிடரான தந்தையுடன் வாரந் தோறும் செவ்வாய்க்கிழமைகளில் திருவேற்காட்டில் கருமாரியம்மன் ஆலயத்தில் உள்ள ப்ரத்யங்கிராவை தரிசனம் செய்வதுடன், மாதந்தோறும் அமாவாசையில் ப்ரத்யங்கிரா சன்னதி வாயிலில் தங்குவதை வழக்கமாக கொண்டிருந்தார். அப்படி ஒரு நாள் தங்கும் போது, நள்ளிரவில் பச்சை நிறத்தில் பாவாடை சட்டையுடன், தலை நிறைய பூ வைத்த ஒரு சிறுமி சுவாமிகளை எழுப்பி, தினசரி ராகுகால பூஜையின் மூலம் எனது மகிமைகளை உலகிற்கு பரப்பு, எனது அருளும் ஆசியும் என்றும் உனக்கு உண்டு என்று கூறி மறைந்தாள். மெய்சிலிர்த்த சுவாமிகள் தன் முன் வந்தது பால ப்ரத்யங்கிரா என்பதை உணர்ந்து அம்பாளை மனமுறுகி வணங்கினார்.

ப்ரத்யங்கிரா அன்னையின் பெயரை சொல்லி முடிக்கும் முன், ப்ரத்யங்கிரா என்பவள் உக்ர தெய்வம் என்றும், வனத்தில் வசிப்பவள் என்றும் ப்ரத்யங்கிராவின் படத்தை வீட்டில் வைத்து வழிபடுவது தவறு என்பது போன்ற அச்சுறுத்தல்களை மக்களிடம் உண்டாக்குபவர்கள் முன் ஜெய் ப்ரத்யங்கிரா என்பவள் சகல தெய்வத்தின் ஒரே சக்தியாக திகழக்கூடியவள் என்பதை எங்கும், எப்போதும் கூறி மக்களிடம் உள்ள பயத்தை விலகச்செய்து கொண்டிருப்பவர் தான் நம் **ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்.**

அம்பாளின் வாக்கிற்கு இணங்க அகிலாண்டக்கோடி, ப்ரம்மாண்ட நாயகி அதர்வண வேதத்தின் சிம்மாசனேஸ்வரி, அன்னை ஜெய் ப்ரத்யங்கிராவின் மகிமைகளையும், ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகுகால பூஜையில் உள்ள சூட்சம ரகசியங்கள் மற்றும் பயன்களையும் விளக்கி, அனைத்து தரப்பட்ட மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக எடுத்துரைக்க வருகிறார் **ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்.**


**ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்**

அலுவலகம் : பழைய எண் : 3/3, புதிய எண் : 708, 150 அடி அகரம் ரோடு, திருவஞ்சேரி, சேலையூர், சென்னை - 600126.

பீடம் : 40, வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமாள் கோயில், (இரயில்வே கேட் வழி) வெங்கடாபுரம் (அஞ்சல்) செங்கல்பட்டு மாவட்டம் - 603 204.

**தொடர்புக்கு : 98400 86373 / 90252 33000**

## ப்ரபஞ்ச ரகசியம் நிகழ்ச்சி

உங்கள் வாழ்வில் வெற்றி நடைபோட ஒருமுறை சுவாமிகள் நடத்தும் ப்ரபஞ்ச ரகசியம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும். ப்ரபஞ்ச ரகசியம் நிகழ்ச்சியின் குறிக்கோளே **தெரிந்துக்கொள், புரிந்துக்கொள், மாற்றிக்கொள், வெற்றிக்கொள்** என்பதே ப்ரபஞ்ச ரகசியம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்வியல் நடைமுறையில் உள்ள ரகசியங்களை தெரிந்து கொண்டு உங்கள் வாழ்வில் சர்வ வளங்களும், நலன்களும் பெறவும்.



உங்கள் வாழ்வில் எவ்வித பிரச்சனைகள் இருந்தாலும், ஜெய் ப்ரத்யங்கிரா பீடத்தில் அம்பாளின் அருளால் 30 ஆண்டுகளாக அன்னையின் நுண்ணிய உபாசனையில் திளைத்து இருக்கும் **ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்** திருக்கரங்களால் தேய்பிறை அஷ்டமி அன்று நடைபெறும் நடுநிசி நிகும்பலா ஜெய் ப்ரத்யங்கிரா ஹோமம் மற்றும் தேய்பிறை சதுர்த்தசி (சர்வ அமாவாசைக்கு முன்தினம்) நடைபெறும் மங்கள மஹா சண்டி ஹோமத்தில் தொடர்ந்து கலந்துக்கொண்டு அம்பாளின் அனுகிரஹத்தால் நீங்கள் அனைத்து பிரச்சனைகளில் இருந்து விடுபட்டு வாழ்வில் சந்தோஷமும் நிம்மதியும் அடையலாம்.

## ஜெய் ப்ரத்யங்கிரா அன்னையின் அருளாணைக்கு இணங்க ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள் வழங்கும் தெய்வசக்தியூட்டப்பட்ட பொக்கிஷங்கள்

**ஜெய் ப்ரத்யங்கிரா பாதகமலம் :**
ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகு கால பூஜை செய்து அம்பாளை உணர்ந்த ஒவ்வொரு அடியார் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒரு உன்னத பொக்கிஷம். ஜெய் ப்ரத்யங்கிரா பாதகமலம் இருக்கும் இல்லத்தில் இருள் நீக்கி ஒளி பெறச்செய்கிறது.



**ஜெய் ப்ரத்யங்கிரா சிம்மமுக கவசம் :**
ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகு கால பூஜை மற்றும் ஜெய் ப்ரத்யங்கிரா பாதகமல பூஜை செய்யும் ஒவ்வொரு அடியாரும் உடலில் அணிந்து இருக்க வேண்டிய அற்புத கவசம், ஜெய் ப்ரத்யங்கிரா சிம்மமுக கவசம். ஜெய் ப்ரத்யங்கிரா சிம்மமுக கவசம் அணிவதன் மூலம் பாதுகாப்பு கவசம் எப்போதும் நம்முடன் இருப்பது போல் உணர்வோம்.



**ஜெய் ப்ரத்யங்கிரா பொக்கிஷ பெட்டகம் :**
ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகு கால பூஜை மற்றும் ஜெய் ப்ரத்யங்கிரா பாதகமல பூஜை செய்யும் ஒவ்வொரு அடியார்களின் இல்லத்தில் இருக்க வேண்டிய ஒரு அற்புத பொக்கிஷ பெட்டகம், ஜெய் ப்ரத்யங்கிரா பொக்கிஷ பெட்டகம் இருக்கும் இடத்தில் பஞ்சபூத சக்தியின் அளவை ஒருபடி உயர்த்தும், செய்யும் செயலை வெற்றி பெற உதவும்.




**ஜெய் ப்ரத்யங்கிரா போற்றி அர்ச்சனை நாணயம் :**
ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகு கால பூஜையில், விருட்சி பூ மற்றும் வேப்பிலை பதித்த ஜெய் ப்ரத்யங்கிரா போற்றியை அர்ச்சனை நாணயத்தால் அர்ச்சனை செய்துவந்தால் ஜெய் ப்ரத்யங்கிரா அன்னையின் அருளால் பூஜையின் பலன் மேலோங்கும்.





**ஜெய் சர்வமங்களா எண்ணெய் ஜெய் தெய்வசக்தி மற்றும் ஜெய் ஆரோக்ய எண்ணெய் :**
ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகு கால பூஜை செய்து அம்பாளை உணர்ந்தவர்கள், தங்களின் இல்லத்தில் ஜெய் சர்வமங்களா எண்ணெய்யை பயன்படுத்தி விளக்கு ஏற்றுவது அவசியம். இதை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் தெய்வசக்தியை நிலை நிறுத்தி தீய சக்திகளை வெளியேற்றி சர்வ மங்களத்தையும் அளிக்கிறது.



**ஜெய் பஞ்ச பூத எண்ணெய் :**
மனித உடல் இயங்குவதே பஞ்சபூத சக்தியால் தான். இந்த பஞ்ச பூத எண்ணெய்யை பயன்படுத்துவதன் மூலம் உடலில் பஞ்ச பூத சக்திகளின் குறைபாடுகளால் ஏற்படும் மனஅழுத்தம், மனக்குழப்பம், மனக்கவலை, தீய எண்ணங்களில் இருந்து விடுபடச்செய்து, நமது ஆற்றலை அதிகரிக்கச்செய்கிறது.



**ஜெய் தேக பாதுகாப்பு எண்ணெய் :**
உலகில் நிலவும் தற்கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு உடலுக்கு தேவையான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி தேகத்தை பாதுகாப்பாக இருக்கச் செய்கிறது.



**ஜெய் தேக பாதுகாப்பு மூலிகை பொடி :**
நமது உடலுக்கு தேவையான ஆற்றலையும், சக்தியையும் தந்து. அனைத்து இன்னல்களில் இருந்தும் நமது உடலை பாதுகாக்க உதவுவதே, ஜெய் தேக பாதுகாப்பு மூலிகை பொடியின் தன்மையாகும்.



U.S.DESIGNS, S.P.KOIL : 863 740 5870

# ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்

## ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள் அருளிய

## ஜெய் ப்ரத்யங்கிரா போற்றி

1. ஜெய் ஜெய் ப்ரத்யங்கிரா போற்றி
2. ஜெய் மங்கள ரூபிணியே போற்றி
3. ஜெய் உலகாளும் தாயே போற்றி
4. ஜெய் அகிலாண்டகோடி ப்ரம்மாண்ட நாயகியே போற்றி
5. ஜெய் உக்ர ரூபமே போற்றி
6. ஜெய் சிம்ம ரூபிணியே போற்றி
7. ஜெய் அஷ்ட சர்பம் கொண்டவளே போற்றி
8. ஜெய் அஷ்டமி சந்திரனை சூடியவளே போற்றி
9. ஜெய் கபாலம் அணிந்தவளே போற்றி
10. ஜெய் சூலம் ஏந்தியவளே போற்றி
11. ஜெய் பாசம் டமரு ஏந்தியவளே போற்றி
12. ஜெய் நீல வர்ணியே போற்றி
13. ஜெய் சிம்மத்தில் அமர்ந்தவளே போற்றி
14. ஜெய் உன் பாதம் பணிந்தோம் போற்றி
15. ஜெய் அருள் வளர்க்கும் அன்னையே போற்றி
16. ஜெய் ஆனந்த ரூபிணியே போற்றி
17. ஜெய் பைரவனின் வடிவமே போற்றி
18. ஜெய் இன்னல்கள் கலைவாய் போற்றி
19. ஜெய் சர்வ சக்தியே போற்றி
20. ஜெய் காக்கும் சக்தியே போற்றி
21. ஜெய் சர்வ வளங்களை அளிப்பவளே போற்றி
22. ஜெய் லட்சுமியின் வடிவமே போற்றி
23. ஜெய் நவக்கிரக நாயகியே போற்றி
24. ஜெய் சங்கடம் தீர்ப்பவளே போற்றி
25. ஜெய் மங்களம் தருபவளே போற்றி
26. ஜெய் சரஸ்வதியின் ரூபமே போற்றி
27. ஜெய் சரபரின் ரூபமே போற்றி
28. ஜெய் மஹா சக்தியே போற்றி
29. ஜெய் சத்ருக்களை அழிப்பவளே போற்றி
30. ஜெய் யோகம் அருள்பவளே போற்றி
31. ஜெய் வாழ்வை காப்பவளே போற்றி
32. ஜெய் என்றும் நிலைத்திருப்பவளே போற்றி
33. ஜெய் எல்லாமும் ஆனவளே போற்றி
34. ஜெய் அன்பின் வடிவமே போற்றி
35. ஜெய் ராஜராஜாக்கள் பூஜித்தவளே போற்றி
36. ஜெய் எங்கும் நிறைந்தவளே போற்றி
37. ஜெய் எல்லையில்லா வடிவமே போற்றி
38. ஜெய் அக்னி ரூபமே போற்றி
39. ஜெய் குங்கும நாயகியே போற்றி
40. ஜெய் சந்திரனின் சக்தியே போற்றி
41. ஜெய் வறுமை தீர்ப்பவளே போற்றி
42. ஜெய் சகல வரம் தரும் அன்னையே போற்றி
43. ஜெய் திருவருள் தருவாய் போற்றி
44. ஜெய் பாதாள ரூபிணியே போற்றி
45. ஜெய் நவகிரக தோஷம் நீக்குபவளே போற்றி
46. ஜெய் கர்மவினை தீர்ப்பவளே போற்றி
47. ஜெய் சக்தியை தருபவளே போற்றி
48. ஜெய் சகல தெய்வத்தின் வடிவமே போற்றி
49. ஜெய் சண்டி காளியே போற்றி
50. ஜெய் அதர்வண பத்ரகாளியே போற்றி
51. ஜெய் அச்சம் தீர்ப்பவளே போற்றி
52. ஜெய் அல்லல் போக்குபவளே போற்றி
53. ஜெய் சாபத்தை போக்குபவளே போற்றி
54. ஜெய் பாவத்தை போக்குபவளே போற்றி
55. ஜெய் பயத்தை போக்குபவளே போற்றி
56. ஜெய் பிணிகள் போக்குபவளே போற்றி
57. ஜெய் தீய சக்திகளை அழிப்பவளே போற்றி
58. ஜெய் சகல சௌபாக்யத்தை அளிப்பவளே போற்றி
59. ஜெய் அனுக்கிரஹம் அருள்பவளே போற்றி
60. ஜெய் குழந்தை வரம் அளிப்பவளே போற்றி
61. ஜெய் மரண பயம் போக்குபவளே போற்றி
62. ஜெய் அபயம் தருபவளே போற்றி
63. ஜெய் காத்து நிற்பவளே போற்றி
64. ஜெய் கருணைக் கடலே போற்றி
65. ஜெய் சந்திர ரூபிணியே போற்றி
66. ஜெய் தடைகள் உடைப்பவளே போற்றி
67. ஜெய் வெற்றியை தருபவளே போற்றி
68. ஜெய் பில்லி சூன்யம் ஏவல் போக்குபவளே போற்றி
69. ஜெய் என்றும் அருள்புரிபவளே போற்றி
70. ஜெய் எண்ணத்தில் வாழ்பவளே போற்றி
71. ஜெய் ஆபத்தில் வருபவளே போற்றி
72. ஜெய் வரம் அருளும் அன்னையே போற்றி
73. ஜெய் தாயாக வருபவளே போற்றி
74. ஜெய் வேத நாயகியே போற்றி
75. ஜெய் நிழலாக வருபவளே போற்றி
76. ஜெய் சித்தர்கள் போற்றியவளே போற்றி
77. ஜெய் சத்ரு பயம் போக்குபவளே போற்றி
78. ஜெய் எந்த நாளும் காப்பவளே போற்றி
79. ஜெய் தன தான்யம் அருள்பவளே போற்றி
80. ஜெய் அஷ்டமி ஹோமத்தில் வருபவளே போற்றி
81. ஜெய் குழந்தை போல் சிரிப்பவளே போற்றி
82. ஜெய் அதர்மத்தை அழிப்பவளே போற்றி
83. ஜெய் தர்மத்தை காப்பவளே போற்றி
84. ஜெய் துன்பத்தை தீர்ப்பவளே போற்றி
85. ஜெய் இன்பத்தை அளிப்பவளே போற்றி
86. ஜெய் தரித்திரம் தீர்ப்பவளே போற்றி
87. ஜெய் ஐஸ்வர்யம் அருள்பவளே போற்றி
88. ஜெய் சோகத்தை தீர்ப்பவளே போற்றி
89. ஜெய் சுகத்தை அளிப்பவளே போற்றி
90. ஜெய் வளம் தருபவளே போற்றி
91. ஜெய் நலம் அருளும் அன்னையே போற்றி
92. ஜெய் சக்தி பீடமாய் திகழ்பவளே போற்றி
93. ஜெய் அனுதினமும் காப்பாய் போற்றி
94. ஜெய் இருளை போக்குபவளே போற்றி
95. ஜெய் ஒளியை தருபவளே போற்றி
96. ஜெய் நித்யஜோதியே போற்றி
97. ஜெய் வழித்துணை வருபவளே போற்றி
98. ஜெய் குடும்பத்தை காப்பவளே போற்றி
99. ஜெய் பக்த ப்ரியாயை போற்றி
100. ஜெய் அடியார் இல்லத்தில் வாழ்பவளே போற்றி
101. ஜெய் ராகுகால நாயகியே போற்றி
102. ஜெய் ராகுகால பூஜை ஏற்பவளே போற்றி
103. ஜெய் பாதகமல பூஜை ஏற்பவளே போற்றி
104. ஜெய் உனது பாத கமல பூஜை செய்யும் இடத்தில் வாழ்பவளே போற்றி
105. ஜெய் பேரீச்சம்பழம் தேன் ஏற்பவளே போற்றி
106. ஜெய் உப்பில்லா வடை ஏற்பவளே போற்றி
107. ஜெய் கோரும் வரம் தருபவளே போற்றி
108. ஜெய் வெண்பாக்கத்தில் திகழ்பவளே போற்றி
109. ஜெய் ப்ரத்யங்கிரா பீடத்தில் வாழ்பவளே போற்றி
110. ஜெய் ப்ரத்யங்கிரா ஜெய் ஜெய் ப்ரத்யங்கிரா அன்னையே போற்றி போற்றி

ஜெய் ப்ரத்யங்கிரே ! உ ஜெய் ஜெய் ப்ரத்யங்கிரே !!

# ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்

## உபதேசிக்கும்

## ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகுகால பூஜை செய்முறை

தர்ம சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், வழிபாடுகள்,விரதங்கள்,பிரார்த்தனைகள்,வேண்டுதல்கள்,பரிகார பூஜைகள் எல்லாம் காலம்காலமாக தொன்று தொட்டு நம் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டு வருவதாகும். பரிகாரம் என்பது கஷ்ட நஷ்டங்கள், இடையூறுகள், தடைகளை அகற்றி நல்வழி காட்டுமாறு கடவுள் இடத்தில் வேண்டிக்கொள்வதாகும்.

தீபம் ஏற்றுவது மிக சக்தி வாய்ந்த பரிகாரம் ஆகும். அதுவும் அதிகாலை,மாலை பொழுது மற்றும் அந்தந்த தெய்வங்களுக்கு உகந்த வேளையில் ஏற்றப்படும் தீபங்களுக்கு கூடுதல் விசேஷ சக்தி உண்டு.

அதர்வண பத்ரகாளியான ஜெய் ப்ரத்யங்கிரா தேவிக்கு உகந்த ராகு கால வேளையில் தினசரி தீபம் ஏற்றி பூஜை செய்வதில் பல சூட்சம இரகசியங்கள் அடங்கி உள்ளது என்பதால், பூவுலகில் வாழும் மக்கள் அனைவரும் இன்புற்று வாழ உலகிலேயே முதல் முறையாக வேறு எவரும் கூறாத எளிய தீப வழிபாட்டு பூஜை முறையை துன்பப்படும் பக்தர்களுக்கு எடுத்துரைத்து வருகிறார் **ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்**

தினசரி வீட்டில் இருந்தபடி ராகுகால வேளைகளில் ஏற்றப்படும் தீபம் உடனுக்குடன் துன்ப நிவர்த்தியை தரும்.ராகுகால வேளையில் முடியாதவர்கள் காலை அல்லது மாலை 6 மணிமுதல் 7 மணிக்குள் தீபம் ஏற்றலாம்.

விதை நீக்கிய பேரீச்சம் பழத்தில் இரண்டு சொட்டு தேன் விட்டு, ஒரு டம்ளரில் பானகம் வைத்து, மற்றொரு டம்ளரில் தண்ணீர் வைக்க வேண்டும், எவர் சில்வர் மற்றும் பிளாஸ்டிக் தவிர்த்து பித்தளை, செம்பு, வெள்ளி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்த வேண்டும். இரண்டு மண் அகல்விளக்கில் திரி போட்டு ஜெய் சர்வமங்களா எண்ணெய் மற்றும் சுத்தமான நல்லெண்ணெய் பயன்படுத்தி தீபம் ஏற்றவும். உங்கள் வேண்டுதலை நினைத்துக் கொண்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள மந்திரங்களை கூறவும்.

| | |
|---|---|
| **ஜெய் நன்றாக குரு வாழ்க குருவே துணை** | **: 21 முறை** |
| **ஓம் கம் கணபதயே நமோ நமஹ** | **: 16 முறை** |
| **ஜெய் ப்ரத்யங்கிரே! ஜெய் ஜெய் ப்ரத்யங்கிரே!!** | **: 27 முறை** |
| **ஜெய் ப்ரத்யங்கிராயை வித்மஹே<br>பக்த ப்ரியாயை தீமஹி<br>தந்நோ தேவி ப்ரஜோதயாத்** | **: 9 முறை** |
| **ஜெய் ப்ரத்யங்கிரா போற்றி** | **: 6 முறை** |

என்று கூறி பிரார்த்தனை செய்து தண்ணீர், பானகம் மற்றும் பேரீச்சம் பழத்தை நெய்வேத்யம் செய்யவும். பூஜை முடிந்த பின் பானகத்தை அருந்தி விடவும்.தண்ணீர் மற்றும் பேரீச்சம்பழம் ஆகியவை ஒரு நாள் இரவு பூஜை செய்த இடத்தில் இருக்க வேண்டும். மறுநாள் ராகு காலத்திற்கு முன் அல்லது பூஜை செய்யும் நேரத்திற்கு முன் தண்ணீரையும்,பேரீச்சம்பழத்தையும் எடுத்து சாப்பிடவும், ஜெய் சர்வமங்களா எண்ணெய்யுடன் சுத்தமான நல்லெண்ணையில் ஏற்றப்படும் தீபம் சுடர்விட்டு பிரகாசிக்கும் போது, உங்கள் வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷத்தை உண்டாக்கி வாழ்க்கையில் தடைகளை அகற்றி, பில்லி சூனியத்திடம் இருந்து காக்கும்.

இந்த ஜெய் ப்ரத்யங்கிரா தினசரி ராகு கால பூஜையை தொடர்ந்து செய்து பயன் பெற்றவர்கள் ஏராளம். நீங்களும் உங்கள் வீட்டில் ராகுகால பூஜை செய்து வீட்டில் நடக்கும் அற்புதங்களை உணரலாம்.


வேந்தர்

வியாழக்கிழமை தோறும் காலை 8.00 முதல் 9.00 மணிவரை **நேரலை** மற்றும் தினசரி மாலை 5.00 முதல் 5.15 மணிவரை சுவாமிகளின் நிகழ்ச்சியை காணத்தவறாதீர்கள்.

புதுயுகம்

தினந்தோறும் மாலை 4.20 முதல் 4.30 மணிவரை

சுவாமிகளின் நிகழ்ச்சிகள், உபதேசங்கள் மற்றும் ஜெய் ப்ரத்யங்கிரா பீடத்தில் நிகழும் நிகழ்வுகளை அறிந்துக்கொள்ளவும் மற்றும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை காண பின்தொடரவும்

JAI PRATHYANGIRA TV

YouTube
JAI PRATHYANGIRA

ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
JAI PRATHIYANGIRA PEEDAM

Web Site: https://jaiprathyangirapeedam.org